முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்
முன்னிலை: திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.
2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை
இடைநிலை மனு எண். 3/2024
in
அசல் வழக்கு எண்.577/2022

D. சாந்தி ... மனுதாரர்/ வாதி

//எதிர்//

1. K. பெருமாள்

2. P. பாலமுருகன்

3. T. சுமதி ... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இந்த மனு 27.03.2025ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.அருண்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.அசோக் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

**உத்தரவு**

மனுதாரர்/ வாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151–ன்கீழ் பதிலுரையை (Reply Statement) தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு :–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும்,

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதலாவது மற்றும் 2–வது பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாதிக்கு கிடைக்கக்கூடிய பங்குகள் பற்றி தவறாக கூறியுள்ளனர். முதலாவது மற்றும் 2–வது பிரதிவாதிகளுடன் 3–வது பிரதிவாதி வஞ்சக கூட்டாக சேர்ந்துள்ளார். வழக்கில் சரியான தீர்வு காண்பதற்கு உண்டான விவரங்களை பதிலுரையில் மனுதாரர் கூறியுள்ளார். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

**3.** <u>2–வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு முதல் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. எதிர்மனுதாரர்களால் மனுவில் ஒப்புக் கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். முதலாவது மற்றும் 2–வது பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாதிக்கு கிடைக்கக்கூடிய பங்குகள் பற்றி தவறாக கூறியுள்ளனர் என்பது உண்மை இல்லை. முதலாவது மற்றும் 2–வது பிரதிவாதிகளுடன் 3–வது பிரதிவாதி வஞ்சக கூட்டாக சேர்ந்துள்ளார் என்பது உண்மை இல்லை. வழக்கில் சரியான தீர்வு காண்பதற்கு உண்டான விவரங்களை பதிலுரையில் மனுதாரர் கூறியுள்ளார் என்பது உண்மை இல்லை. மனுதாரர் கூட்டுக்குடும்ப உறுப்பினர் அல்ல. மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் பங்கு கிடைக்கத்தக்கது அல்ல. மனுதாரர் தவறான விவரங்களை பதிலுரையில் கூறியுள்ளார். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :–

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. **<u>தீர்வு :–</u>**

மனுதாரர்/ வாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151–ன்கீழ் பதிலுரையை (Reply Statement) தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், தாவா சொத்துக்களில் மனுதாரருக்கு உரிமை உள்ளதா? என்பது பற்றியும், தத்து எடுத்தது பற்றியும், தீர்மானிக்க வேண்டி உள்ளது என்றும், எனவே மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டி உள்ளது என்றும் கூறினார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் வழக்கு விசாரணையை கால தாமதப்படுத்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறினார்.

8. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்தபோது இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கில் மனுதாரர்/வாதி கூட்டு குடும்ப உறுப்பினரா? என்பது பற்றியும், தத்து எடுக்கப்பட்டுள்ளாரா? என்பது பற்றியும், மனுதாரர்/வாதிக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பது பற்றியும் தீர்மானிக்கப்பட வேண்டி உள்ளது. மனுதாரர் தரப்பில் வழக்கில் சரியான தீர்வு காண்பதற்கு உண்டான

விவரங்களை பதிலுரையில் கூறியுள்ளதாக கூறப்பட்டது ஏற்கும் படியாக உள்ளது. விசாரணை நீதிமன்றம் வழக்கின் இரு தரப்பினர்களுக்கும் பதிலுரை தாக்கல் செய்யவும், கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவும் வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியம் ஆகின்றது. முதலாவது மற்றும் 2–வது எதிர்மனுதாரர்களுக்கு கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளிக்க படுவதால் எதிர்மனுதாரர்களுக்கு பாதிப்பு ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட காரணங்கள் ஏற்கும் படியாக உள்ளது. மேற்கண்ட பரிசீலனைகளின்படி மனு அனுமதிக்கத்தக்கது என பிரச்சனையின் மீது தீர்வு காணப்படுகிறது.

10. முடிவில் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 1, 2 – எதிர்மனுதாரர்கள் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/– என்.ராமகிருஷ்ணன்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

(ஒம்/– என்.ராமகிருஷ்ணன்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.